THE HINDU
10 MAY 2024

# Ensure proper CCTV coverage in counting centres: EC

**The Hindu Bureau**
CHENNAI

The Election Commission has instructed the District Election Officers (DEOs) to coordinate with the Electricity and Public Works Departments to ensure an uninterrupted power supply for CCTV cameras in counting centres.

Chief Electoral Officer Satyabrata Sahoo chaired a virtual meeting of DEOs and other senior officials on Thursday. The availability of diesel generators with automatic change-over provision in case of a power failure, UPS back-up for CCTV cameras in strong rooms to ensure seamless switching, and stabiliser for CCTV installation were among the facilities reviewed.

"The DEOs have also been instructed to ensure that facilities such as surge protector/lightning arrester are installed so that the CCTV cameras do not get affected because of lightning," a release said.

All DEOs/Returning Officers were earlier instructed to make arrangements for fixing an additional CCTV camera in front of the door of each strong room. A three-tier cordoning system, comprising Central and State armed police personnel, had been set up in all counting centres.

THE HINDU
10 MAY 2024

# EC orders repolling at Gujarat booth

The Election Commission on Thursday ordered repolling on May 11 at Parthampur polling station in the Dahod constituency in Gujarat. Vijay Bhabhor, son of BJP candidate Jasvantsinh Bhabhor, had live-streamed voting there on May 7. The incident was reported as attempted booth capturing.


THE TIMES OF INDIA
10 MAY 2024

# EVM guardians: Cadres on vigil till D-Day

## Parties Have Deployed 20 Members

Ram.Sundaram
@timesgroup.com

TOI



**ON IMPORTANT DUTY:** At Anna University. Relying only on fans for ventilation in the intense heat, the cadres continue to switch between their phones and LED screens

**Chennai:** Polling for the parliamentary elections in Tamil Nadu ended on April 19 and since then members of political parties haved remained outside strongroom where the Electronic Voting Machines (EVMs) are stored. The vigil will continue until counting day on June 4.

Each party has deployed 10-20 members, supervised by a leader, to ensure security of the sealed EVMs. DMK and AIADMK roped in functionaries such as area secretaries, while BJP assigned advocates from its legal wing to oversee CCTV cameras trained on the strong rooms.

Teams monitor the strongrooms from a temporary shed about 100 metres away, working in shifts. Relying only on fans for ventilation in the intense heat, the cadres continue to switch between their phones and LED screens. Any disruptions prompt immediate alerts to internal WhatsApp groups containing candidates. Local police and the Election Commission of India (ECI) are also notified, said Vivek, a BJP volunteer.

Inside the temporary shed, members from rival parties display camaraderie rarely seen in politics. They believe a cooperative atmosphere ensures effective monitoring, and at night, they sometimes share shifts. Each party pays its members ₹1,000 per day, along with allowances, food, snacks and whatever else is needed.

For many, this vigil is a chance to advance within their parties. They see it as an opportunity to climb up through the ranks. "We can interact directly with the candidates, ministers, and district secretaries. Sometimes, we even engage with local police inspectors and tahsildars, connections that could be useful later," said Ragunathan, a DMK member who reported the first incident of CCTV camera footage disruption in Chennai at Anna University. This is where EVMs for the South Chennai constituency were stored, and the issue was resolved within an hour.

AIADMK candidate J Jayavardhan emphasized that the Election Commission of India (ECI) should have implemented proper precautions for CCTV backups, noting that many private security firms excel at this.

"This involves the hard work of hundreds of people, and the Commission can't afford to overlook it," he said.

## Install an extra camera in front of strongroom: CEO

**Chennai:** All district election officers and returning officers have been instructed to install an extra CCTV camera in front of each strongroom at the counting centres, according to chief electoral officer Satyabrata Sahoo. This would enable the political party agent to access the footage even in case of a malfunction in the existing CCTV cameras, already installed in front of the strongroom.

Sahoo held a video conference on Thursday with district election officers/returning officers, commissioners of police, superintendents of police, and district level engineers of public works department to review security measures for strong rooms, counting centres, and CCTV surveillance.

In an official statement, Sahoo said directives had been given to DEOs to coordinate with electricity department and PWD to ensure continuous power supply for CCTV setups at counting centres. The availability of diesel generators, UPS backup for CCTV cameras in the strong room, and stabilizers for CCTV setup to prevent voltage fluctuations in power supply was reviewed. "DEOs have also been instructed to ensure that measures such as surge protector/lightning arrester are installed so CCTV cameras do not get affected by lightning," Sahoo said.

According to Election Commission, candidates or their representatives, upon request, accompany the DEO/RO/ARO in batches to inspect, verify, and ensure the security of the strong room. The CEO said a three-tier security system, including central armed police forces, state armed police, and local police, has been established with restricted access at all counting premises to prevent unauthorized individuals from entering. TNN

THE TIMES OF INDIA
10 MAY 2024

# Re-election at Gujarat booth after 'live bogus voting'

TIMES NEWS NETWORK

**Gandhinagar:** The Election Commission (EC) has cancelled votes in Parthampur booth of Gujarat's Dahod LS seat and ordered a repoll on May 11 following alleged booth capturing and bogus voting Tuesday by the son of a BJP member who streamed it live on social media.

Vijay Bhabhor was arrested earlier and five election officials at the booth suspended, including the presiding officer, his deputies and a constable. The action followed a probe report from the Dahod returning officer.

Bhabhor allegedly went into the booth at 5.49pm and left at 5.54pm, livestreaming his acts. Although he deleted the video after it went viral, officials alleged that he voted for two others.

Congress urged the EC Thursday to take cognisance of other such irregularities. "Complaints have been filed by Congress. The EC must act on all irregularities," party spokesperson Manish Doshi said.

DECCAN CHRONICLE
10 MAY 2024

# 2 CCTV cameras replaced in Anna University

G BABU JAYAKUMAR
CHENNAI, MAY. 9

Unexpected brief showers in Chennai on Thursday morning caused a flutter among the representatives of political parties camping inside the Anna University premises to keep a watch over the strong rooms in which the polled Electronic Voting Machines (EVMs) from South Chennai Lok Sabha constituency are kept as they found two of the total 215 cameras conking out on Thursday.

With the party representatives, who keep a round the clock vigil in all the counter centre premises by coming on shifts, raising an alarm, the authorities replaced the two faulty cameras and explained that the rains had caused the problem and that it was rectified immediately, assuring them that there was no security lapse otherwise.

Later in the day, the Chief Electoral Officer, Sathyabrata Sahoo, held a video conference with the District Election Officers / Returning Officers, Commissioners of Police, Superintendents of Police, District level Engineers of PWD (Civil and Electrical) to review the arrangements relating to EVM strong room security, over all security at the counting centers, monitoring of security by CCTV installations and other related matters with regard to the General Election to Lok Sabha 2024.

An official press release said, 'As per the instructions of ECI, the contesting candidates or their representatives are allowed to watch the security arrangements of the Strong Room through the CCTV display facility provided at the counting centres. The CCTV cameras were already fixed on the outside of every Strong Room Door having the polled EVMs,'

Besides, the entire counting center was under general surveillance by adequate number of CCTV cameras and to ensure uninterrupted coverage, all the DEOs/ROs were instructed on May 2 to make arrangements for fixing of one additional CCTV camera in front of the door of each Strong Room with a separate dedicated line, switch, router, NVR and TV for political party agents to view the footage even if there was failure in the other CCTV cameras fixed in front of strong room door, it said.

Instructions had been issued to the DEOs to coordinate with Electricity Department and PWD officials to ensure uninterrupted power supply for CCTV facilities in the counting centers and availability of diesel generator with automatic change over provision in case of power failure and UPS backup for strong room CCTV cameras to ensure seamless watching, it said.

Also they 'had been instructed to have a stabiliser for CCTV installation to avoid voltage fluctuations. DEOs had also been instructed to ensure that measures like surge protector/lightning arrester were installed so that the CCTV cameras do not get affected because of lightning, it said.

'As per the existing directions of the ECI, the candidates or the representatives of the candidates based on their requests, accompany the DEO/RO/ARO to the inner perimeter, in batches, to see, verify and satisfy regarding strong room security. A Three-tier cordoning system comprising Central Armed Police Forces, State Armed police and local police has been set up with controlled access in all counting premises to prevent any entry of unauthorized persons,' it added.

THE NEW INDIAN EXPRESS
10 MAY 2024

# Fix addl camera on strong room premises: ECI

EXPRESS NEWS SERVICE
@ Chennai

Chief Electoral Officer Satyabrata Sahoo has said the Election Commission of India (ECI) has directed district election officers (DEOs) and returning officers (ROs) to ensure continuous CCTV coverage and install additional cameras focused on the doors of strong rooms containing the electronic voting machines (EVMs).

In a meeting held via video conference, Sahoo discussed security arrangements for strong rooms and CCTV coverage with election officials.

According to the official statement, DEOs and ROs have been instructed to install one extra CCTV camera in front of each strong room door where the EVMs are kept. These cameras will have dedicated lines, switches, routers, network video recorders (NVRs), and TVs for real-time monitoring by political party agents.

Furthermore, DEOs have been tasked with coordinating with the electricity department and PWD officials to ensure an uninterrupted power supply to CCTV systems at counting centres.

Meanwhile, two surveillance cameras mounted at the counting centre established at Anna University failed to function briefly on Wednesday due to the rains the previous night. They were immediately replaced.

THE NEW INDIAN EXPRESS
10 MAY 2024

# Plaints unaddressed, long poll code troubles MSMEs

**M SARAVANAN** @Coimbatore

OWNERS of MSME units say the continuation of the model code of conduct (MCC) despite completion of polling is causing difficulties for them.

Speaking to *TNIE*, J James, president of Tamil Nadu Association of Cottage and Tiny Enterprises (TACT) said, "As the state government administration has been restricted due to the MCC, we could not take grievances regarding day-to-day operations to the government. There are anomalies in power supply, tax collection, water supply etc. But we have no option than waiting until June 4."



"As per the issues related to power tariff, the demand charge has been increased from ₹35 per kw to ₹154. It was 450% surge. When industrial unions had been demanding to reduce the tariff, the election was announced and the MCC norm was rolled out. We took our grievance to officials. They replied until the MCC is withdrawn, they could not move it," he said.

He opined that the ECI can relax the MCC and allow the state government to take decisions to rectify the issues in the industrial sector.

C Natarajan, president of Coimbatore SIDCO Industrial Estate Manufacturers' Welfare Association said, "Officials said they would look into them after the election results are out."

A Sivashanmuga Kumar, president of Coimbatore Tiny and Small Foundry Owners' Association said, "The local body has imposed industrial tax and garbage collection tax newly. There are also anomalies on GST collection from industrial units. However, we have to wait till June 4."

DT Next
10 MAY 2024

# Sahoo asks DEOs to install additional CCTVs focusing strongrooms

**CHENNAI: Chief Electoral Officer of Tamil Nadu Satyabrata Sahoo insisted the District Electoral Officers (DEOs) and Returning Officers (ROs) to install additional CCTV cameras in front of the sealed door of each strongroom having the polled electronic voting machines (EVMs) in the counting centres in the state.**



Chairing a meeting through video conference from Secretariat on Thursday, Sahoo reviewed the security arrangements in all the 39 counting centers and installations of CCTV cameras, covering the premises of the counting centers and the strongrooms as per the Election Commission (EC) instruction.

"Apart from the existing CCTVs cameras under general surveillance of the counting centre, an additional CCTV camera should be installed in front of each strongroom," Sahoo said in a statement.

Instructions have been issued to the DEOs to coordinate with Tangedco and the Public Works Department to ensure uninterrupted power supply for CCTV arrangements in the counting centres. The DEOs have also been instructed to ensure availability of diesel generator with automatic change over provision in case of power failure, UPS backup for strongroom CCTV cameras to ensure seamless switching for that gap when power cuts off and diesel generator is turned on, stabilisers for CCTV installation to avoid voltage fluctuations in power supply have been reviewed, he added.

The DEOs have also been instructed to install surge protectors and lightning arresters to avoid freezing of live feed due to lightning. The direction has been issued in the wake of such an incident in Villupuram Parliamentary constituency.

Sahoo further said that the candidates or their representatives, based on request, can accompany the DEO, RO or ARO to the inner perimeter, in batches, to verify strongroom security.

இந்து தமிழ் திசை
10 MAY 2024

### வாக்கு எண்ணும் மையங்களில் சீரான மின் விநியோகம்

# சிசிடிவி பழுதின்றி இயங்க நடவடிக்கை

● மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு சத்யபிரத சாஹு அறிவுறுத்தல்

● சென்னை

தமிழகம், புதுச்சேரியில்ல் ஏப்.19-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. அன்று பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு இயந்திரங்கள், அந்தந்த தொகுதிகளில் உள்ள வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள்ள 45 கட்டிடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இக்கட்டிடங்களில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், வளாகம் முழுவதும் சிசிடிவி கேமரா பொருத்தி கண்காணிக்கப்படுகிறது. வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள ஸ்டிராங் அறைமற்றும் அதை சுற்றியுள்ளபகுதிகளில் 150-க்கும் மேற்பட்ட கேமராக்கள் பொருத்தி கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், முதலில் நீலகிரி அதைத் தொடர்ந்து, ஈரோடு, தென்காசி, மதுரை, விழுப்புரம் ஆகிய தொகுதிகளைத் தொடர்ந்து, நேற்று தென்சென்னை தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை மையத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பழுது ஏற்பட்டது. இதனால் சர்ச்சை உருவானது.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஸ்டிராங் அறையின் உள்ளேயும் 2 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை இரண்டும் அறைக்கு வெளியில் வைக்கப்பட்டுள்ள எல்இடி டிவியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமே வேட்பாளர்களின் முகவர்கள், அலுவலர்கள், காவல்துறையினர் கண்காணிக்கின்றனர்.

கேமரா பழுது ஏற்பட்டதால் எழுந்த சர்ச்சைகளை தொடர்ந்து, ஸ்டிராங் அறையின் உள்ளே பொருத்தப்பட்டுள்ள 2 கேமராக்களையும் தனித்தனியாக 2 டிவிக்களில் பொருத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டு அதன்படி, பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு, நேற்று மாலை அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மாநகராட்சி ஆணையர்கள் உள்ளிட்டோருடன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார். இதில், மாநகர காவல் ஆணையர்கள், மாவட்ட எஸ்.பி.கள், பொதுப்பணித்துறை மாவட்ட பொறியாளர்களும் பங்கேற்றனர். அப்போது, கண்காணிப்பு கேமராக்கள் பழுதில்லாமல் முழுமையாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஸ்டிராங் அறையின் கதவு முன்பாக, ஒரு கூடுதல் கேமரா நிறுவ வேண்டும் என்று அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஸ்டிராங் அறையில் ஒரு கேமரா இணைப்பு பழுதானாலும், மற்றொரு கேமராவின் இணைப்பு மூலம் கண்காணிக்க தனித்தனியாக டிவிக்களுடன் கேமராக்களை இணைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பொதுப்பணித்துறை, மின் வாரியத்துடன் இணைந்து வாக்கு எண்ணும் மையங்களில் கேமராக்கள் தொடர்ந்து இயங்க தேவையான மின்சாரத்தை தடையின்றியும் சீராகவும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு வேளை மின் தடை ஏற்பட்டால் தானியங்கி ஜெனரேட்டர்களும், ஸ்டிராங் அறையில் மின் தடை ஏற்பட்டால் உடனடியாக மின் இணைப்பு வழங்க யுபிஎஸ் வசதியும் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. மின்னல் போன்றவற்றால் கேமராக்கள் இயக்கம் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாக சத்யபிரத சாஹு தெரிவித்தார்.

CEO, Tamil Nadu instructed the DEOs to Ensure proper CCTV coverage in counting centres.

இந்து தமிழ் திசை

10 MAY 2024

## தென் சென்னை மக்களவை தொகுதி

# வாக்கு எண்ணும் மையத்தில் 2 சிசிடிவி கேமராக்கள் பழுது

● சென்னை

தென் சென்னை மக்களவை தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் 2 சிசிடிவி கேமராக்கள் நேற்று பழுதாகின.

தென் சென்னை மக்களவை தொகுதியில் சோழிங்கநல்லூர், சைதாப்பேட்டை, வேளச்சேரி உள்ளிட்ட 6 சட்டப்பேரவை தொகுதிகள் இடம்பெற்றுள்ளன. இதில் 10 லட்சம் ஆண் வாக்காளர்கள், 10 லட்சத்து 21 ஆயிரம் பெண் வாக்காளர்கள், 464 திருநங்கையர் என மொத்தம் 20 லட்சத்து 23 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். கடந்த ஏப்.19-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 10 லட்சத்து 96 ஆயிரம் பேர் (54.17 சதவீதம்) வாக்களித்தனர்.

அதைத் தொடர்ந்து வாக்குப்பதிவு இயந்திரங்கள் சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அறையில் 4 அடுக்கு பாதுகாப்பில் வைக்கப்பட்டு, 210 சிசிடிவி கேமராக்கள் மூலமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. அந்தந்த வேட்பாளர்களின் முகவர்களும் 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர். இந்நிலையில், நேற்று பாதுகாப்பு அறைக்கு வெளிப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள 2 சிசிடிவி கேமராக்கள் பழுதாகின. இதற்கு வேட்பாளர்களின் முகவர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன் கூறும்போது, “நேற்று பலத்த காற்றுடன் மழை பெய்ததால், 2 சிசிடிவி கேமராக்கள் பழுதாகின. அது எங்கள் கவனத்துக்கு வந்தவுடன் பழுது நீக்கப்பட்டது. பாதுகாப்பு அறையில், வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் உள்ள எந்த கேமராக்களும் பழுதாகவில்லை” என்றார்.

Repair of 2 CCTV cameras in ~~the~~ Chennai South counting centre

தினத்தந்தி
10 MAY 2024




சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தலைமையில் காணொலிக் காட்சி மூலம் நடந்த ஆலோசனை கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தேர்தல் நடத்தும் அதிகாரிகள், போலீஸ் கமிஷனர்கள், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள், பொதுப்பணித் துறையின் மாவட்ட அளவிலான பொறியாளர்கள் (சிவில் மற்றும் எலக்ட்ரிகல்) ஆகியோர் பங்கேற்றபோது எடுத்தபடம்.

### வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள

# பாதுகாப்பு அறைகளின் கேமராக்கள் பழுதானால் மாற்று ஏற்பாடு

## மாவட்ட அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் அதிகாரி ஆலோசனை

சென்னை, மே.10-
வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளின் கேமராக்கள் பழுதானால் அதற்கான மாற்று ஏற்பாடு தொடர்பாக அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு ஆலோசனை நடத்தினார்.

**பழுதான கேமராக்கள்**

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் 19-ந்தேதி நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடந்துமுடிந்துள்ளது. அதைத் தொடர்ந்து 39 வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள்ள 'ஸ்ட்ராங் ரூம்' என்ற பாதுகாப்பு அறையில் வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அந்த அறைகள் பூட்டி சீலிடப்பட்டுள்ளன. அந்த அறைகளில் வைக்கப்பட்டு இருக்கு சிசிடிவி கேமராக்கள் வழியாக எல்.இ.டி. டிவி திரைகள் மூலம் கண்காணிக்க முடியும். ஒரு நொடி கூட விடாமல் தொடர்ந்து வீடியோவாக காட்சிகள் பதிவாக்கிக் கொண்டிருக்கும்.

மேலும், அங்கு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு, துணை ராணுவத்தினர், ஆயுதப்படை போலீசார் மற்றும் உள்ளூர் காவல்துறையினர் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஊட்டி, ஈரோடு, விழுப்புரம், மதுரை, தென் சென்னையில் உள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டு இருந்த சிசிடிவி கேமராக்களில் பழுது ஏற்பட்டது. இதுகுறித்து அரசியல் கட்சிகள் சார்பில் தேர்தல் கமிஷனிடம் புகார் அளிக்கப்பட்டது.

**டிரோன்கள் பறக்க தடை**

இதற்கு பதிலளித்த தேர்தல் கமிஷன், அதிக வெப்பத்தினாலும், 'பிளக் பாயிண்ட்'-ல் ஏற்படும் மின்சார இணைப்பு பிரச்சினைகளாலும், கேமராக்களில் பழுது ஏற்பட்டது என்றும், அவை உடனடியாக சரி செய்யப்பட்டது என்றும் கூறியது.

மேலும், வாக்கு எண்ணிக்கை மையங்களின் அருகே டிரோன்கள் பறக்க தடை செய்யப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள்ள சிசிடிவி கேமராக்களில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக பொதுப்பணித்துறை மற்றும் மின்சாரத்துறை அதிகாரிகள் உடனடியாக செயல்பட்டு, அவை தொடர்ந்து இயங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

**ஆலோசனை கூட்டம்**

இந்த நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று பிற்பகலில் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தலைமையில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற இந்த கூட்டத்தில், வாக்கு எண்ணிக்கைக்கான முன்னேற்பாடுகள் மற்றும் வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கான பயிற்சி தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது.

**பார்வையிடலாம்**

இதன் பிறகு சத்யபிரத சாகு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

காணொலிக் காட்சி மூலம் நடந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தேர்தல் நடத்தும் அதிகாரிகள், போலீஸ் கமிஷனர்கள், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள், பொதுப்பணித் துறையின் மாவட்ட அளவிலான பொறியாளர்கள் (சிவில் மற்றும் எலக்ட்ரிகல்) ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் வாக்குப்பதிவு எந்திரங்களின் பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணிக்கை மையங்கள் ஆகியவற்றில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகள் உள்ளிட்டவை குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளை வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் மூலம் வேட்பாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பார்வையிடலாம். வாக்கு எண்ணிக்கை மையங்களில் பரவலாக பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் தவிர, பாதுகாப்பு அறைகளின் கதவுகளுக்கு வெளியேயும் ஏற்கனவே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**மாற்று ஏற்பாடு**

கண்காணிப்பு கேமராக்கள் மூலம் தடையில்லாமல் வீடியோ படங்கள் பதிவு செய்யப்படுவதற்கு ஏதுவாக அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் கடந்த 2-ந்தேதி அறிவுரைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதன்படி, ஒவ்வொரு பாதுகாப்பு அறைகளின் கதவுகளுக்கு முன்பாகவும் கூடுதலாக ஒரு கண்காணிப்பு கேமராவை தனி இணைப்பு, தனி சுவிட்ச், என்.வி.ஆர். மற்றும் டிவி திரை ஆகியவற்றுடன் பொருத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒருவேளை ஒரு கண்காணிப்பு கேமராவில் பழுது ஏற்படும் நிலை ஏற்பட்டால், அடுத்த கண்காணிப்பு கேமரா மூலம் வீடியோ பதிவுகளை தடையின்றி அரசியல் கட்சியினர் பார்த்துக் கொள்ள முடியும். எனவே கண்காணிப்பு கேமராக்களுக்கு தடையற்ற மின்சாரம் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை, மின்சாரத்துறை, பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

**இடிதாங்கி**

ஒருவேளை மின்சாரம் துண்டிக்கப்பட்டால் தானாகவே டீசல் ஜெனரேட்டர்கள் உடனே செயல்பட்டு, அங்கிருக்கும் கேமரா மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள உபகரணங்களும் தடையில்லாமல் இயங்கும் ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இதில் எந்த இடைவெளியும் இருக்கக் கூடாது என்பது பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இடி, மின்னல் ஏற்பட்டு அதனால் கேமராக்களுக்கு பாதிப்பு நேரிட்டுவிடாத வகையில் இடிதாங்கிகளை பொருத்தவும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு அறையில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள வேட்பாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தால் அவர்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செல்ல வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

CEO, Tamil Nadu chaired a ~~meeting~~ virtual meeting of DEOs and instructed to make arrangement of fixing of addition cameras.

தினகரன்

10 MAY 2024

நீலகிரி, ஈரோடு, தென்காசி, மதுரை, விழுப்புரத்தை தொடர்ந்து

# தென்சென்னை தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் சிசிடிவி கேமரா பழுது

**தேர்தல் ஆணையம் மீது கட்சி நிர்வாகிகள் அதிருப்தி**

சென்னை, மே 10: நீலகிரி, மதுரை, ஈரோடு, தென்காசி, விழுப்புரத்தை தொடர்ந்து தென்சென்னை தொகுதி மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டிருந்த மையத்தில் சிசிடிவி கேமராக்கள் பழுதடைந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகத்தில் 39 நாடாளுமன்ற தொகுதியிலும் கடந்த மாதம் 19ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்தது. இந்த மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் மூன்று அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. முதல் பகுதியில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ வீரர்கள், 2வது அடுக்கில் தமிழக சிறப்பு போலீஸ் படையினரும், 3வது பகுதியில் தமிழ்நாடு போலீசாரும் நிறுத்தப்பட்டுள்ளனர். வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஸ்டிராங் ரூம் உள்ளேயும், வெளியேயும் நூற்றுக்கணக்கான சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, அனைத்துக்கட்சி வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் டிவியில் 24 மணி நேரமும் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது. மாவட்ட தேர்தல் அதிகாரிகளும், உயர் போலீஸ் அதிகாரிகளும் தினசரி அங்கு சென்று பாதுகாப்பு பணிகளை கண்காணித்து வருகிறார்கள்.

இந்நிலையில் தென்சென்னை தொகுதியில் பதிவான மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள ஸ்டிராங் ரூமில் சிசிடிவி கேமராக்கள் பழுதாகி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தென்சென்னை நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்கு இயந்திரங்கள் கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்டிராங் ரூமில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இந்த வாக்கு எண்ணும் மையத்தில் மொத்தம் 210 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இங்கு தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், 2 சிசிடிவி கேமராக்கள் நேற்று முன்தினம் (புதன்) நள்ளிரவு திடீரென பழுதடைந்துள்ளது.

இந்த பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் கேமராக்கள் பழுதடைந்ததாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து அரசியல் கட்சி நிர்வாகிகள் புகார் அளித்தனர். தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் நேற்று காலை பழுதான கேமராக்கள் உடனடியாக அகற்றப்பட்டு 2 புதிய கேமராக்கள் பொருத்தப்பட்டன. தற்போது அங்கு அனைத்து கேமராக்கள் முழு அளவில் இயங்கி வருகிறது.

இதுகுறித்து அரசியல் கட்சி நிர்வாகிகள் கூறும்போது, 'தமிழகத்தில் தேர்தல் முடிந்து 45 நாட்கள் வாக்கு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பது என்பது ஆபத்தான நடைமுறை. 7 கட்ட தேர்தல் என்பது தேர்தல் ஆணையத்தின் தவறான முடிவு. இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தேர்தலை முடித்து வாக்குகள் எண்ணப்பட்டிருக்க வேண்டும். தற்போது மழை, காற்று, அதிக வெயில் காரணமாக கேமராக்கள் வேலை செய்யவில்லை என்று கூறுவது ஏற்கும்படி இல்லை. இது தேர்தல் ஆணையத்தின் தோல்வியையே காட்டுகிறது. ஏற்கனவே நீலகிரி, ஈரோடு, தென்காசி, மதுரை, விழுப்புரம் மையங்களில் கேமராக்கள் பழுதடைந்தது. தற்போது தென்சென்னையில் பழுதடைந்துள்ளது. இனியாவது தேர்தல் ஆணையம் விழிப்புடன் இருந்து, புகார்கள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்றனர்.

## தேர்தல் அதிகாரி ஆலோசனை

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று மாலை அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள ஸ்டிராங் ரூமில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் பழுதின்றி செயல்பட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், வாக்கு எண்ணிக்கை முன்னேற்பாடுகள், வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடுவோருக்கு பயிற்சி அளித்தல், மைக்ரோ பார்வையாளர்கள் நியமித்தல் ஆகியவை குறித்து ஆலோசித்தார். இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு கூறும்போது, 'தமிழகத்தில் வாக்கு எண்ணும் ஏற்பாடுகள், பயிற்சி மற்றும் தொடர்புடைய விஷயங்கள் குறித்து அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் வீடியோ கான்பரன்சிங் மூலம் விவாதிக்கப்பட்டது. அப்போது, வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மையங்களில் சிசிடிவி கேமரா பழுது ஏற்படாமல் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது' என்றார்.



Repair of CCTV camera in chennai South counting centre

தினகரன்

11 0 MAY 2024

### மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்ட

# ஒவ்வொரு ஸ்டிராங் ரூம் கதவின் முன்பும் கூடுதலாக ஒரு கேமரா

**அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவு**



சென்னை, மே 10: மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்ட ஒவ்வொரு ஸ்டிராங் ரூம் கதவின் முன்பும் கூடுதலாக ஒரு சிசிடிவி கேமராவை பொருத்த அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி கூறினார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு நேற்று சென்னை, தலைமை செயலகத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், காவல்துறை ஆணையர்கள், காவல் துறை கண்காணிப்பாளர்கள், பொதுப்பணித்துறை (சிவில் மற்றும் எலக்ட்ரிக்கல்) மாவட்ட அளவிலான பொறியாளர்களுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை ஆய்வு செய்வது குறித்து காணொலி காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்படி, வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள சிசிடிவி காட்சி வசதி மூலம் ஸ்டிராங் ரூமின் பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்ட ஒவ்வொரு ஸ்டிராங் ரூம் கதவுகளின் வெளிப்புறத்திலும் சிசிடிவி கேமராக்கள் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ளன. இது தவிர ஒட்டுமொத்த பாதுகாப்பு நோக்கத்திற்காக முழு வாக்கு எண்ணும் மையமும் போதுமான எண்ணிக்கையிலான சிசிடிவி கேமராக்கள் மூலம் பொது கண்காணிப்பின் கீழ் உள்ளது.

இடையூறு இல்லாத சிசிடிவி காட்சிகளை உறுதி செய்வதற்காக, வாக்கு எண்ணும் மையங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்ட ஒவ்வொரு வலுவான அறையின் கதவின் முன்பும் கூடுதலாக ஒரு சிசிடிவி கேமராவை பொருத்த ஏற்பாடு செய்யுமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கு கடந்த 2ம் தேதி அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிசிடிவி காட்சிகளை பார்ப்பதற்கு தனியான பிரத்யேக லைன், ஸ்விட்ச், ரூட்டர், என்விஆர் மற்றும் டிவியுடன் அரசியல் கட்சி முகவர் காட்சிகளை பார்க்க முடியும். ஸ்டிராங் ரூம் கதவுக்கு முன்னால் பொருத்தப்பட்டுள்ள மற்ற சிசிடி'வி கேமராக்களில் தோல்வி ஏற்பட்டாலும் கூட பார்க்க முடியும்.

வாக்கு எண்ணும் மையங்களில் சிசிடிவி வசதிக்காக தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய மின் துறை மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டால், டீசல் ஜெனரேட்டரை இயக்கும்போது, அந்த இடைவெளிக்கு தடையின்றி மாறுவதை உறுதி செய்ய சிசிடிவி கேமராக்களுக்கான யுபிஎஸ் காப்புப்பிரதி, மின்னழுத்த ஏற்ற இறக்கங்களை தவிர்ப்பது, சிசிடிவி நிறுவலுக்கான ஸ்டெபிலைசர், டீசல் ஜெனரேட்டர் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்னல் காரணமாக சிசிடிவி கேமராக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, சார்ஜ் ப்ரொடெக்டர்/மின்னல் அரெஸ்டர் போன்ற நடவடிக்கைகள் நிறுவப்பட்டுள்ளதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

All DEOs are instructed to make arrangements for fixing an additional CCTV camera in front of the door of each strong room.

தினமணி

10 MAY 2024

## வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் கேமராக்கள்- இடிதாங்கிகள்

சென்னை, மே 9: வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்தவும், மழை, இடி, மின்னலால் கேமராக்கள் பாதிக்கப்படாமல் இருக்க இடிதாங்கிகளை பொருத்தவும் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு உத்தரவிட்டுள்ளார்.



(விரிவான செய்தி உள்ளே)

# வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் கேமராக்கள்- இடிதாங்கிகள்

## தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு உத்தரவு

சென்னை, மே 9: வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்தவும், மழை, இடி, மின்னலால் கேமராக்கள் பாதிக்கப்படாமல் இருக்க இடிதாங்கிகளை பொருத்தவும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு உத்தரவிட்டுள்ளார்.

வாக்குஎண்ணும்மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள் ஆகியன குறித்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகளுடன் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வியாழக்கிழமை ஆலோசித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக, அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

காணொலி வழியாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், பொதுப்பணித் துறை பொறியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர். வாக்குகள் பதிவான அனைத்து இயந்திரங்களும் பாதுகாப்பான அறைகளில் வைக்கப்பட்டுள்ளன. இந்த அறைகளுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிப்பு கேமரா காட்சிகள் வழியாக வேட்பாளர்களும் அவர்களது முகவர்களும் பார்வையிட தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளது.

வாக்குகள் பதிவான மின்னணு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளுக்கு வெளியே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் வாக்கு எண்ணும் மைய வளாகங்களிலும் போதுமான அளவுக்கு கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கூடுதல் கேமராக்கள்: கண்காணிப்பு கேமராக்களில் இருந்து தடையில்லாமல் காட்சிகளைப் பார்க்கும்வகையில் இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு

அறையின் வாயிலுக்கு வெளியேயும் கூடுதலாக ஒரு கண்காணிப்பு கேமராவைப் பொருத்த தேர்தல் நடத்தும் அதிகாரிகள் அறவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கென தனியாக மின் இணைப்பு, ஸ்விட்ச், தொலைக்காட்சி வசதிகளை அளிக்க வேண்டும். ஏற்கெனவே பொருத்தப்பட்ட கேமராக்களில் பிரச்னை ஏற்படும் போது, புதிதாக பொருத்தப்பட்ட கேமராக்களில் இருந்து தடையில்லாமல் காட்சிகளைப் பெற முடியும்.

வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள க்ண்காணிப்பு கேமராக்கள் தொடர்ந்து இயங்க வசதியாக, தடையற்ற சீரான மின்சார விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும். இதற்காக மின்சாரம் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். மின்சாரம் தடைபடும் பட்சத்தில் டீசலில் இயங்கும் மின்னாக்கிகளை (ஜெனரேட்டர்கள்) பயன்படுத்த வேண்டும்.

இடிதாங்கிகள் அவசியம்: கேமராக்களுக்கு யூபிஎஸ்., மற்றும் மின்சாரத்தை சீராக வழங்கக் கூடிய ஸ்டெபிலைஸர் கருவிகளைப் பொருத்த வேண்டும். மழை பெய்யும் தருணங்களில் இடி மின்னலால் கேமராக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க இடிதாங்கிகளை பொருத்த வேண்டும். இதனால், கேமராக்கள் பாதிக்கப்படாமல் இருக்கும். வாக்குகள் பதிவான இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளை வேட்பாளர்கள் அல்லது அவர்களது முகவர்களின் வேண்டுகோள் அடிப்படையில் நேரில் பார்வையிட அழைத்துச் செல்லலாம். அப்போது மாவட்டத் தேர்தல் அதிகாரியோ அல்லது தேர்தல் நடத்தும் அதிகாரியோ, உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியோ உடனிருக்க வேண்டும்.

வாக்கு எண்ணும் மையங்கள் அனைத்திலும் மூன்று அடுக்கு பாதுகாப்புபோடப்பட்டுள்ளதால், தேவையற்ற நபர்களின் நுழைவு தடுக்கப்பட்டுள்ளது என்று தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

ஆலோசனைக் கூட்டத்தில், தலைமைச் செயலகத்தில் இருந்து கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி சங்கர் லால் குமாவத், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி எச்.எஸ்.ஸ்ரீகாந்த் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

CEO, Tamil Nadu ordered the DEOs to fix additional CCTV cameras in all Strong rooms.

தினமணி
10 MAY 2024

# தென் சென்னை வாக்கு எண்ணும் மையத்தில் சிசிடிவி பழுது

**சென்னை, மே 9:** தென் சென்னை மக்களவை தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பழுதடைந்தன.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் ஏப்.19-ஆம் தேதி ஒரே கட்டமாக நடந்து முடிந்தது. இதில், சென்னையில் உள்ள 3 மக்களவைத் தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு இயந்திரங்கள் அண்ணா பல்கலைக்கழகம் (தென் சென்னை) , லயோலா கல்லூரி (வட சென்னை), ராணி மேரி கல்லூரியில் (மத்திய சென்னை) வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில்; கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தென் சென்னை மக்களவை தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தில் மொத்தம் 210 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதில், புதன்கிழமை காற்றுடன் மழை பெய்ததால் 2 கேமராக்கள் பழுதாகின.

தகவல் அறிந்த தேர்தல் நடத்தும் அதிகாரிகள் உடனடியாக பணியாளர்களை கொண்டு சீரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 20 நிமிஷங்களுக்குப் பிறகு புதிய கேமராக்கள் பொருத்தப்பட்டன. இதையடுத்து சிசிடிவி கேமராக்கள் வழக்கம்போல் இயங்கின.

Repair of CCTV camera in Chennai South counting centre.